பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 30 (16—10—71) சனி   வெளியூர்: புரட்டாசி 31 (17—10—71) ஞாயிறு [இதழ்: 103

என்ன காரணமோ— தெரியவில்லை

புதுடில்லி, அக். 16—

என்ன காரணமோ தெரியவில்லை — பாகிஸ்தான் நிறுவனரான முகம்மதலி ஜின்னாவின் கல்லறையைப் பாதுகாக்கவும் — பராமரித்துவரவும், பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள், திடீரென ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளனர்.

இந்த அவசரச் சட்டம் உடனடியாகச் செயலுக்கு வந்துவிட்டது.

கலைஞர் பெறும் ‘தமிழவேள் பட்டம்’

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கட்குத் தமிழ் ஆராய்ச்சியாளர் மன்றம், ‘தமிழவேள்’ என்ற பட்டத்தை வழங்கவிருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற கலைஞரைப் பாராட்டுவதற்காகத் தமிழ் ஆராய்ச்சியாளர் மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள விழாவில் இந்தப் புதிய பட்டத்தையும் வழங்கவிருக்கின்றனர்.

தென்னகப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழ் ஆராய்ச்சித் துறை அறிஞர்கள் பலரும் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கிச் சிறப்பிக்கவிருக்கின்றனர்; இந்த விழா, நாளை (17—10—71) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்நாட்டில் முதன்முதலில் ‘தமிழவேள்’ என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர் தஞ்சையைச் சேர்ந்த திரு. உமா மகேசுவரம் பிள்ளையாவார்; இவர் நீதிக் கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவராகவும் — தமிழ்ப் புரவலராகவும் — தமிழ் மக்களின் தனி மதிப்பைப் பெற்றவராகவும் திகழ்ந்தார்; கரந்தைப் புலவர் கல்லூரியை நிறுவியவரும் இவரேயாவார்.

அடுத்து, ‘தமிழவேள்’ பட்டம் பெற்றவர் சர். பி. டி. இராசன் அவர்கள் ஆவார். நீதிக் கட்சித் தலைவரான திரு பி. டி. இராசன் அவர்களைப்பற்றித் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்; தமிழ்ப் புரவலராகவும் — தமிழ் மக்களின் தனி மரியாதையைப் பெற்றவராகவும் இருந்துவருகிறார் — திரு. பி. டி. இராசன் அவர்கள்.

அடுத்து, இப்போது கலைஞர் கருணாநிதி அவர்கள், ‘தமிழவேள்’ ஆகிறார். ‘தமிழவேள்’ என்ற சிறப்புப் பட்டம் இப்போதுதான் கலைஞருக்குச் சூட்டப்படுகிறது என்றாலும், சில ஆண்டுகட்கு முன்னரே, ‘குறள் நெறி’ போன்ற தமிழ் இலக்கிய ஏடுகளில் கலைஞரை, ‘தமிழவேள்’ என்று சிறப்பித்து எழுதியிருக்கின்றனர்.

கலைஞர் கருணாநிதி அவர்கட்கு, ‘கல்லக்குடி கொண்டான்’ என்ற சிறப்பும் பட்டம் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ‘டாக்டர்’ பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

இப்போது, ‘தமிழவேள்’ என்ற பட்டம் வழங்கி மகிழவிருக்கிறது – தமிழ்நாட்டுத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் மன்றம்.

தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் தனிப் பெரும் காவலராகத் திகழ்ந்துவரும் கலைஞர் அவர்கட்குத் ‘தமிழவேள்’ என்ற பட்டம் வழங்குவது சாலப் பொருத்தமானதாகும்.

‘வேள்’ என்றால், தலைவன் – காவலன் – சிற்றரசன் – ‘சிறப்புக்குரிய தலைவன்’ என்றெல்லாம் பொருள் உண்டு.

எத்தகைய சிறப்புப் பட்டத்துக்கும் முற்றிலும் தகுதிபடைத்த கலைஞர் அவர்களுக்குத் ‘தமிழவேள்’ பட்டம் கிடைப்பதில் ஒன்றும் வியப்பில்லை!

கலைஞருக்கு, இது மட்டுமல்ல — இன்னும் எத்தனையோ பட்டங்கள் காத்திருக்கின்றன! அவர் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் ஆற்றியிருக்கின்ற பணிகள் — இன்னும் ஆற்றவிருக்கின்ற பணிகள் அளவிடற்கரிது! எனவேதான், தமிழ் மக்கள், கலைஞரால் தங்களுக்கு இருக்கின்ற அன்பையும், நன்றியுணர்ச்சியையும் வெளிப்படுத்திக்கொள்ள இத்தகைய சிறப்புப் பட்டங்களையெல்லாம் வழங்கி — அதில் மகிழ்ச்சி காணுகின்றனர்.

கலைஞர் அவர்களைத் தேடிச் சிறப்புக்குமேல் சிறப்பு வந்து சேருவது சில காழ்ப்புணர்ச்சிக்காரர்கட்கு வேண்டுமானால் பிடிக்காதவையாக இருக்கலாம்; அவர்களெல்லாம் தமிழராகப் பிறந்தவர்களாக இருப்பினும், தமிழுக்கும் — தமிழ் இனத்துக்கும், அறிந்தோ அறியாமலோ துரோகம் இழைப்பதையே தொழிலாகக் கொண்டு விட்டவர்களாவார்கள்!

உண்மையான தமிழர்களால் உவந்து அளிக்கப்படும் ‘தமிழவேள்’ பட்டத்தை நாமும் கலைஞருக்குச் சூட்டி மகிழ்வோமாக! வாழ்க கலைஞர்!

—மா. செ.

தூய்மையைக் காப்பதில் இந்தியர் அலட்சியம்- தலைமையமைச்சர் இந்திரா இடித்துரை

பம்பாய், அக். 15—

“பொதுவாக இந்தியர்கள் எப்படித் தூய்மையின் அவசியத்தை உணராதிருக்கிறார்கள் என்பதற்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி ஓர் உதாரணத்தை எடுத்துக்காட்டினார்.

ஜெர்மனியில் இந்திய மாணவர் ஒருவர், பஸ் டிக்கெட் ஒன்றை அலட்சியமாகத் தெருவில் வீசியெறிந்தார்.

இதைக் கண்ணுற்ற போலீசுக்காரர் ஒருவர்; அவருக்கு ஒரு மார்க் அபராதம் விதித்தார்.

அபராதத்தைக் கட்டிய அவர், போலீசாரிடமிருந்து பெற்றுக்கொண்ட இரசீதை மீண்டும் தெருவிலேயே வீசியெறிந்தார்!

எந்த நேரத்திலும் தாக்குதல் ஏற்படும்?

இரு முனைகளிலும் பாகிஸ்தான் ஆயத்தமாகிறது

அவசரநிலை பிரகடனப்படுத்துவது பற்றி இந்திய அரசு ஆய்வு

புதுடில்லி, ஆக. 16—

பாகிஸ்தானையொட்டிய இந்தியாவின் கிழக்கு – மேற்கு எல்லையில் பதட்ட நிலை நாளும் கடுமையாகி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இரு பகுதிகளிலும் பாகிஸ்தான், இராணுவ நடமாட்டங்களைத் தீவிரப்படுத்தி வருகிறது; மைய நிலைகளில படைகள் முகாமிட்டு இருப்பதாகவும், நிலைமை எந்த வேளையிலும் வெடிக்கக்கூடும் என்று தோன்றுவதாகவும் கூறப்படுகிறது.

இத்தனைக்கும் அதிபர் யாகியா கான், ‘இந்தியா போருக்கு ஆயத்தம் ஆகிறது’ என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

இந்திய இராணுவம், எந்த நிலைமையையும் சமாளிக்கும் எச்சரிக்கை நிலையிலேயே இருந்துவருகிறது. அது, பாகிஸ்தான் படைகளின் அத்துமீறல்களைச் சந்திக்கத் தயாராக இருந்துவருகிறது. ஒரு சிறிய சலசலப்புக்கூட ஒரு பெரிய போரைத் தோற்றுவிக்கக் கூடிய அபாய நிலையில் இப்பகுதி இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மேலும், கிழக்கு வங்க விடுதலைப் படையின் தாக்குதல் கடுமையாகி வருவதால், அதனை அடக்க பாகிஸ்தான் மீண்டும் ஒரு மூர்க்கத் தாக்குதலில் ஈடுபடக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

அவசர நிலை பிரகடனம்

இந்திய அரசு, முன்னெச்சரிக்கையாக நாட்டில் அவசர நிலையைப் பிரகடனம் செய்வது குறித்துத் தீவிரமாகச் சிந்தித்து வருவதாகத் தெரியவருகிறது.

தலைமையமைச்சரும் — அரசியல் நிகழ்ச்சிகள் குழுவில் உள்ள அவரது சக அமைச்சர்களும், முப்படைத் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

புதிய தாக்குதல் நடைபெற்றால் அதைச் சமாளிக்க நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விடும் பணியில், அரசாங்கச் செயலாளர்கள் குழு ஈடுபட்டிருக்கிறது.

அவசர நிலை பிரகடனப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டால், அதைத் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கும், அரசு ஆயத்தமாகி இருக்கிறது.

நாட்டின் வளங்களைத் திரட்டுவது — உற்பத்தி — விலை — விநியோகக் கட்டுப்பாடு ஆகியவைகளைச் செயல்படுத்தல் — செய்திகளை ஒழுங்குபடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக, இந்தியப் பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

நேற்று நடத்தப்பட்ட உயர்மட்ட ஆலோசனையின்போது, இன்னும் ஓரிரு நாட்களில் நிலைமை எப்படி வளரப் போகிறது என்று கூர்ந்து கவனித்து வருவது என்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

மேற்கு எல்லையில் பாகிஸ்தானின் ஆத்திரமூட்டல்கள் கடுமையாக இருப்பினும், ஒரு பெரும் போரைத் தவிர்க்க முடியும் என்றே இந்திய அரசு இன்னமும் நம்புகிறது.

ஆயினும், திடீர்த் தாக்குதல் நடத்தப்பட்டால் அதைச் சமாளிக்கும் திறமையுடன், இந்தியா இருப்பதாகவே அனைவரும் கருதுகிறார்கள்.

தயார் நிலையில் இந்தியக் கடற்படை

எந்தப் போர் அச்சுறுத்தலையும் சமாளிப்பதற்கு இந்தியாவில் பெரும் அளவில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

கப்பற்படையின் தயார் நிலையை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு ஒத்திகைகள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

கப்பற்படையைச் சேர்ந்த பிரிவுகள் ‘உஷார்’ நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அறிவிப்பு

18—10—71 அன்று நமது அலுவலகத்துக்கு விடுமுறையாகையால், ‘நம் நாடு’ அடுத்த இதழ் 19—10—71 அன்று சென்னையிலும், மறு நாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

தமிழகத்தில் புதியதொழிற்சாலைகள்— டில்லி அனுமதி கிடைப்பது உறுதி

தொழில் அமைச்சர் செ. மாதவன் நம்பிக்கை— செய்தியாளர்களிடம் விளக்கம்

சென்னை, அக். 16—

“தமிழ்நாட்டில் கால்ஷியம் — கார்பைட் — போரக்ஸ் (இரசாயனத் தொழிற்சாலை), ‘ஸ்பான்ச் அயர்ன்’ ஆகிய மூன்று புதிய தொழிற்சாலைகள் துவங்க மத்திய அரசு முன் அனுமதி தருவதற்கு மத்திய தொழிலமைச்சர் உறுதி கூறியிருக்கிறார்.

“இது தவிர, பெட்ரோலியம் அமைச்சகம் தமிழ்நாட்டில் நைலான் தொழிற்சாலை துவங்குவதற்கான அனுமதியை ஏற்கனவே கொடுத்துவிட்டது”

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், நிருபர்களிடம் கூறினார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

“தமிழக அரசு ஏற்று நடத்தும் 5 ஆலைகளுக்கு மத்திய அரசின் பங்குத் தொகையான 51 சதவிகிதத்தில், இன்னும் ரூ. 24 இலட்சம் மத்திய அரசு தரவேண்டும்; ‘அதை உடனடியாகக் கொடுக்க வேண்டும்’ என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று — ஓரிரு நாட்களில் தருவதாக மத்திய அமைச்சர் மிஸ்ரா உறுதி தெரிவித்தார்.

“புதிதாகத் தமிழகத்தில் ஆறு ஆலைகளை ஏற்று நடத்துவது பற்றி ஆராய்வதற்கான குழுவை அமைக்க வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கை ஏற்கப்பட்டது; இன்று அல்லது நாளை இது குறித்துப் பதில் வரும் என எதிர்பார்க்கிறோம்.”

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 2002 புரட்டாசி 30 (16—10—71) சனி

காமராசரின் ஆரூடம்!

தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியே தெரிந்துகொள்ள முடியாத ஆலமரத்தடி ஜோதிடர்கள், மற்றவர்களின் எதிர்காலத்தைக் கணித்துச் சொல்லி வயிறு பிழைத்துவருவதைப்போல் சிண்டிகேட் 'பெருந்தலைவர்' காமராசர் இப்போது தமிழ்நாட்டின் எதிர்காலம் பற்றி ஆருடம் சொல்லத் தொடங்கியிருக்கிறார்.

'மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதால் ஏற்படும் விளைவுகள் இன்னும் 6 மாத காலத்தில் நன்கு தெரிந்துவிடும்; அதன் பிறகு, முன்பிருந்த காங்கிரசு ஆட்சியை மக்கள் போற்றத் தொடங்குவார்கள்' என்று அவர் கூறியுள்ளார்.

எதையெதையோ எதிர்பார்த்து, எதுவும் கிட்டாமல் இருந்ததெல்லாம் பறிபோய் தமது அரசியல் வாழ்க்கையிலேயே 'விரக்தி' யடைந்திருக்கும் காமராசருக்கு, இப்படி எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது!

வெள்ளத்தில் சிக்கித் தத்தளிப்பவன் ஒரு துரும்பைக் கண்டாலும், அதைப் பிடித்துக்கொண்டு கரையேறலாமா என்று எண்ணுவான். அதைப்போல, காலவெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டுத் தத்தளிக்கும் காமராசர், ஒரு துரும்பாவது துணைக்குக் கிடைக்காதா என்று எதிர்பார்க்கிறார்; அவருக்கு இப்படி ஒரு 'துரும்பு' கிடைத்துள்ளது.

'மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டதால் மக்கள் தி.மு.க. ஆட்சியை வெறுப்பார்கள்; அந்த வெறுப்பை அரசியல் இலாபமாக மாற்றிக்கொள்ளலாம்' என்று கனவு காண்கிறார் காமராசர்!

காமராசர் இப்படிப் பேசுவது இது முதல் தடவையல்ல! இதேபோல் அவர் எத்தனையோ 'ஆறு மாதத் 'தவணை' கொடுத்துப் பார்த்துவிட்டார். மக்கள் அவர் நினைப்பதுபோல் இல்லை என்பதை இன்னமும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

1967 பொதுத் தேர்தலில் காமராசரும் அவரது கட்சியினரும் சற்றும் எதிர்பாராத தோல்வியைக் கண்டதும், இப்படித்தான் அவர் பேசினார் -- 'ஏதோ மயக்கத்தில் மக்கள் தி. மு. க.-வுக்கு ஓட்டுப் போட்டுவிட்டார்கள்; எல்லாம் ஒரு ஆறு மாதம் போனால் புரிந்துவிடும்' என்றுதான் அவர் அப்போது சொன்னார்.

ஆறு மாதம் கழிந்தும், 'தமிழ்நாட்டு அரசியலில் காற்று இப்போது திசைமாறி வீசுகிறது; மக்கள் மயக்கத்திலிருந்து தெளிந்துவிட்டார்கள்; தாங்கள் செய்த தவறை உணர்ந்துவிட்டார்கள்; ஐந்தாண்டுக்கு ஒருமுறைதான் தேர்தல் வருமாகையால் அதுவரை பொறுத்திருப்போம்; அடுத்து அமையப்போவது காங்கிரசு ஆட்சிதான்' என்று சொன்னார்.

அடுத்த தேர்தலும் ஓராண்டு முன்னதாகவே வந்தது; அவரும் -- அவரைச் சார்ந்தவர்களும் 'சரடி'யாகக் கத்திப் பார்த்தார்கள்; தங்களுக்குத் தெரிந்த 'வித்தை'களையெல்லாம் செய்து பார்த்தார்கள்; 'நாங்கள் மயக்கத்திலும் இல்லை -- ஏமாறவும் போவதில்லை; மீண்டும் தி. மு, க. ஆட்சிக்கே எங்கள் வாக்கு' என்று தீர்ப்புப் அளித்தனர்.

தேர்தல் நேரத்தில்கூடச் சொன்னார் -- 'மக்கள் எப்போதோ ஆட்சியை மாற்ற முடிவு செய்துவிட்டார்கள்; தேர்தல் நாளைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று!

காமராசரின் 'கணிப்பு' எவ்வளவு தவறானது என்பதைத் தமிழ்நாடு கண்டது! அவரால் [illegible] கொண்டது! அவர்தான் இன்று 'தவணை' வைக்கிறார்--'ஆறு மாத காலம்' என்று!

"காங்கிரசுக்கு ஓட்டளித்தால் கள்ளுக் கடைகளை ஒழித்துவிடுவோம் என்று மயங்கிவிடாதீர்கள்; நாங்கள் நிச்சயம் கள்ளுக் கடைகளை ஒழிக்கமாட்டோம்" என்று பாண்டிச்சேரி மக்களுக்கு உறுதிமொழி வழங்கி ஓட்டுக் கேட்ட காந்திய சீலர்தான், இன்று இப்படிப் பேசுகிறார்!

ஆறு மாத காலத்தில் இந்த அரசை மக்கள் புறக்கணித்துவிடுவார்கள் என்றால், காந்தி வழிவந்தோரால் ஆளப்பட்டுவந்த மாநிலங்களிலெல்லாம் கள்ளுக்கடைகள் மீண்டும் திறக்கப்பட்டனவே -- அங்கெல்லாம் ஆறு மாதத்திலேயே ஆட்சி மாற்றப்பட்டதா?

அப்படியே ஆறு மாத காலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றப்படுகிறது என்று வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; அப்போதும் காமராசர் கட்சியை ஆட்சிபீடத்தில் ஏற்றிவிடப்போவதில்லை தமிழ்நாட்டு மக்கள்!

காமராசர் ஆட்சியின் இருபதாண்டுக்கால ஆட்சியில், தமிழ்நாடு பட்டபாடு மக்களுக்குத் தெரியாதா? மீண்டுமா அவர்கள் கையில் ஆட்சியை ஒப்படைப்பார்கள்?

மதுவிலக்கு ரத்தானதால் மக்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகளை--இப்போது தமிழ்நாட்டில் இருந்துகொண்டு பேசும் இந்த மகானுபவர், ஆந்திரத்திலும் -- மகாராட்டிரத்திலும்--மைசூரிலும்-- இன்ன பிற மாநிலங்களிலும் மதுவிலக்கு எடுக்கப்பட்டபோது எங்கே போனார்? அங்கெல்லாம்போய் இப்படிப் பேசியிருந்தால், அவருடைய கட்சிக்காரர்கள்கூட தங்கள் முடிவை மாற்றிக்கொண்டிருக்கக்கூடும் அல்லவா?

இதுகூட வேண்டாம்; அகில இந்திய காங்கிரசுக் கமிட்டித் தலைவராக இருந்தாரே -- அப்போதாவது அகில இந்தியக் காங்கிரசில் ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கலாம் அல்லவா -- 'மதுவிலக்கை எந்த மாநிலத்திலும் கைவிடக் கூடாது' என்று!

பணக்காரக் குடியர்களுக்குப் பெர்மிட் வழங்கிவிட்டு -- அந்தப் பெர்மிட் குடியர்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு, 'காந்தீயத்தை' மக்களுக்கு உபதேசித்து வந்தவர்கள்தானே இவர்கள்?

"இந்தப் போலி 'காந்தீயவாதி'களைவிடத் தென்னாட்டுக் காந்தி அண்ணாவின் வழிவந்தவர்களே உண்மையான காந்தீயவாதிகள்" என்பதை மக்கள் உறுதிப்படுத்தி ஆண்டு பலவாகிவிட்டன; இனி, காமராசரையும் -- அவரது கட்சியினரையும் நம் நாடு தயாராக இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

'தமிழக அரசின் திட்டங்களுக்கு இடையூறாக இருப்பவைகளைப் போக்க வழிவகை காண வேண்டும்'

வேலையின்மைபற்றிய நிபுணர் குழுவிடம் அமைச்சர் என்.வி. நடராசன் வலியுறுத்தல்

சென்னை, அக். 16—

இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்ட நிலைமை பற்றி ஆராய்ந்து -- அதைப் போக்குவதற்கு ஆலோசனை கூறுவதற்காக நிபுணர் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்திருக்கிறது.

ஒவ்வொரு மாநிலமாகச் சென்றுவரும் இந்தக் குழு, தமிழ்நாட்டிற்கு வந்தது; இந்தக் குழுவினர், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்களைச் சந்தித்துப் பேசினர்; அதுபோது அமைச்சர் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காகத் தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த முயன்றுவருகிறது.

"ஆனால், முக்கிய அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசிடம் குவிந்து கிடப்பதும், தமிழக அரசிடம் போதிய நிதி வசதி இல்லாத நிலைமையும், திட்டங்களைச் செயல்படுத்த இயலாத இடையூறுகளாக அமைந்துள்ளன.

"தற்போதுள்ள நிலைமையில், எந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முனைந்தாலும் அதிகாரம் இல்லாததும் -- நிதி இல்லாததும் பெரிய தடையாக இருக்கின்றன.

"ஆகவே, ஏழை -- எளியவர்களுக்கும், நடுத்தர வகுப்பினருக்கும் முழு வாழ்க்கை அளிப்பதற்காக மத்திய அரசிடம் தமிழக அரசு அதிக அதிகாரம் கேட்கவேண்டியிருக்கிறது; எனவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கவும், மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கும் மற்ற தடைகளைப் போக்குவதற்கும் நிபுணர் குழு வழிவகை காண வேண்டும்."

காந்தி பிறந்த நாள் விழாவின் பெயரால் கலவரம்

சிண்டிகேடர்களின் திட்டமிட்ட செயல்

திருவாரூர் நகரத் தி. மு. க. துணைச்செயலாளர் மு. அப்துல்லா அறிவிப்பதாவது:—

"4-10-71-ல் அடியக்கமங்கலத்தில், 'காந்தியார் பிறந்த நாள் ஊர்வலம்' என்ற பெயரில், அடியக்கமங்கலம் இரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 400 அல்லது 500 நபர்கள் கொண்ட ஊர்வலம் புறப்பட்டு, அடியக்கமங்கலம் தெருவில் அரிவாள் -- கம்புகளுடனும், குடிபோதையுடனும் சென்றனர்.

வழியில் பள்ளிவாசலில் மாலை 5-மணிக்குத் தொழுகை நடக்கும் நேரம்; பள்ளிவாசல் முன்பாக சிண்டிகேட்காரர்கள் தாரை -- தப்பட்டைகளுடன் கோஷமிட்டு வந்தனர்.

பள்ளிவாசலில் இருந்தவர்கள், 'தொழுகை நடப்பதால் இந்த மாதிரி கோஷங்களையும், தாரை -- தப்பட்டைகளையும் ஒலிக்கக் கூடாது' என எடுத்துச் சொன்னார்கள்; உடனே அவர்களை சிண்டிகேட்டைச் சேர்ந்தவர்கள் தாக்கினர்; இதனால் பலருக்குக் காயம் ஏற்பட்டு, நாகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

'கலகம் செய்யவேண்டும்' என்ற எண்ணத்திலேயே சிண்டிகேட்டினர் ஊர்வலம் வந்ததாகத் தெரிகிறது.

'நாத்திகம்', 'நவசக்தி', 'தினமணி' போன்ற பத்திரிகைகள் இந்த உண்மையை மறைத்து, 'காந்தி பிறந்த நாள் ஊர்வலத்தை முஸ்லீம்கள் வழிமறைத்துத் தாக்கினர்' எனச் செய்தி வெளியிட்டனர்.

சென்ற ஊராட்சித் தேர்தலில் தோல்வியுற்ற சிண்டிகேட்காரர்கள், 'முஸ்லிம்களிடம் கலகத்தை ஏற்படுத்தவேண்டும்' என்ற எண்ணத்திலேயே இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்ததாகத் தெரிகிறது.

சிண்டிகேட் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்தி பொய்யானவையாகும்."

இந்தியா--பாகிஸ்தான் போர் மூண்டால்....

உலகத்தையே சோகத்தில் ஆழ்த்தும் சம்பவமாகும்

நெருக்கடி நிலையில் இந்தியாவுக்கு உதவுவது இன்றியமையாதது --- ஐ. நா.-வில் பிரிட்டிஷ் அமைச்சர் பேச்சு

[illegible]யூயார்க், அக். 15—

"பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள கலவரம் காரணமாக இந்தியாவுக்கு அகதிகள் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது; இது, இந்தியாவின் பொருளாதார அமைப்பைச் சீர்குலைத்து -- அதன் நிதி வசதிகளை வரம்புக்குமேல் ஈடுபடுத்தும்படி செய்கிறது; இந்நிலையில், சர்வதேச உதவியை இந்தியா கோருவது பொருந்தும்.

"மத்தியக் கிழக்கில் நெருக்கடி இருப்பது போதாதென்று, இந்தியாவும் -- பாகிஸ்தானும் விருப்பமில்லாமலே போரில் இறங்க நேரிட்டால், உலகத்துக்கு அதைவிடப் பெரிய சோக சம்பவம் இருக்க முடியாது! ஆகையால் உதவிபுரிய வேண்டுமென்ற கடமையை -- அதிலும் அவசரமாக உதவ வேண்டுமென்பதை 'நாம் எல்லோரும் உணர்ந்து கொண்டிருக்கிறோம் என்று நம்புகிறேன்"

என்று ஐ நா. பொதுப் பேரவையில், இந்தியா – பாகிஸ்தான் தகராறு பற்றிப் பேசுகையில், பிரிட்டிஷ் வெளிவிவகாரத் துறை அமைச்சர் அலெக் டக்ளஸ் ஹியூம் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் மேலும் வலியுறுத்தியதாவது:—

இம்பிரச்சினையில், காலங்கடத்துவதற்கில்லை; ஏனெனில், அண்மையில் இந்தியாவுக்கும்–பாகிஸ்தானுக்குமிடையில் இப்பிரச்சினை புதிதாக -பயங்கரமான அளவை எட்டியுள்ளது.

கொரில்லாப் போரும் -- நாசவேலைகளும் அச்சத்தை அதிகப்படுத்துவதுடன், மீட்புப் பணிகளைத் தடை செய்கின்றன.

இப்பகுதியில் (கிழக்குப் பாகிஸ்தானில்) கொரில்லாப் போரின் அளவை நாம் இன்னமும் புரிந்து கொண்டிருக்கிறோமோ என்று உறுதியாகச் சொல்ல இயலாது; இந்நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, கொரிலாக்களின் நடவடிக்கைகள் கிழக்குப் பாகிஸ்தானில் மற்றோர் அச்சுறுத்தலை உண்டாக்கக்கூடும்; அதன் விளைவாக, பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு ஒட்டுமொத்தமாக அகதிகள் வெள்ளப்பெருக்கு எடுக்கக் கூடும்; இத்தகைய நிலைமை, இரு நாடுகளும் விருப்பமின்றியே போரில் ஈடுபடும்படிச் செய்துவிடக்கூடும்.

இதற்கிடையில் ஐ. நா., மனிதாபிமானப் பணியைச் செய்து வரட்டும்; ஒரு பாவமும் அறியாத கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கையில், நாம் இங்கு கூடி, 'அவர்களுக்கு யார் உணவு வழங்குவது என்பது பற்றி வாதாடிக்கொண்டிருந்தோம்' என்ற பழிச் சொல்லுக்கு இடந்தந்துவிடக் கூடாது.

"ஏற்கனவே அபாயகரமாக உள்ள நிலைமையைப் பாகிஸ்தானின் நடவடிக்கை மேலும் மோசமாக்கியுள்ளது" என்று இரஷ்யப் பத்திரிகைச் செய்தி கூறியது

படைக் குவிப்பு பற்றி இரஷ்ய ஏட்டின் தகவல்

"இந்தியா -- பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் துருப்புகள் குவிப்பு" என்ற தலைப்பில், 'பிராவ்தா' ஏடும் இதர இரஷ்யப் பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

சமுதாய விழிப்புக்குப் புதிய சிந்தனை

இளைஞர்களுக்கு இந்திரா காந்தி வலியுறுத்தல்

பம்பாய், அக். 16—

"வன்மைமிக்க இந்தியாவை உருவாக்குவதற்காகத் தன்னம்பிக்கையுடன் உழைக்க இந்திய இளைஞர்கள் முன்வர வேண்டும்.

"நம்மிடை நிலவும் தாழ்வு மனப்பான்மை போகவேண்டும் -- தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்; இல்லையென்றால், சங்கடமான நிலைமையைச் சமாளிக்க முடியாது.

"தன்னம்பிக்கை இல்லாத காரணத்தினால்தான், அயல்நாட்டு முறைகளை நாம் காப்பியடித்து வருகிறோம்.

"முற்போக்கான சிந்தனையின் மூலம்தான் நாம், நவீன யுகத்தினைச் சேர்ந்தவர்களாக விளங்க முடியும்.

"உடையில் -- இசையில் புதிய மாறுதல்கள் ஏற்பட்டாலும், அவையெல்லாம் மேற்போக்கானவையாகும்; புதிய சிந்தனை உருவாவதன் மூலம்தான் மாறுதல் ஏற்பட முடியும்

"இன்றையக் கல்வி முறையைத் தலைகீழாக மாற்றியாக வேண்டும்.

"இந்தியா உண்மையான சனநாயக நாடாக இருக்கவேண்டுமென்றால், பணக்காரர்களுக்கும் -- ஏழைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் குறைக்கப்பட வேண்டும்.

"ஏழை -- பணக்காரர் ஆகிய இருதரப்பினரும் தொலைப்பட விரும்பமாட்டேன்; ஆனால், என்றைக்கும் ஏழைகளின் பக்கமே இருப்பேன்; ஏனெனில், அவர்கள்தான் நெடுங்காலமாகத் துன்பம் -- துயரங்களை அனுபவித்து வருகின்றவர்கள்!"

—இளைஞர்களிடை பேசுகையில்

சிறப்பான வாழ்வின் திறப்பு விழா!

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு: ரூ.1,00,000

மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 7,00,000*

மொத்தப் பரிசுகள்: 2132

குலுக்கல் நாள்: 31-10-1971

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ.1-தான்

ஒவ்வொரு வரிசைக்கும்	
ஒரு முதல் பரிசு	ரூ. 1,00,000
5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10,000/-	ரூ. 50,000
10 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5,000/-	ரூ. 50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1,000/-	ரூ. 50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100/-	ரூ. 1,00,000
	ரூ. 3,50,000

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள்: 256

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

* 2 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது.

இரு பெரும் உலகத் தலைவர்களின் சந்திப்பு

இந்திரா காந்தி - நிக்சன் சந்திப்புக் குறித்து அமெரிக்கத் தூதர்

இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய உறவு குறித்து விளக்கம்

புதுடில்லி அக். 16—

'தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் -- அதிபர் நிக்சனும் நேரில் பேசப்போவது, ஒருவர் மற்றொருவர் கருத்தை நன்கு அறிந்துகொள்வதற்குப் பெரிதும உதவும்; இந்த இரு பெரும் உலகத் தலைவர்களும் சந்திக்கப்போவதை நம்பிக்கையுடனும ஆர்வத்துடனும் எதிர்நோக்குகிறேன்"

என்று, இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவர் கென்னத் பி. கீட்டிங் கூறியுள்ளார். இந்தியத் தலைமையமைச்சரின் அமெரிக்கப் பயணத்துக்கான ஆயத்தங்களைச் செய்வதற்காக வாஷிங்டன் சென்றுள்ள அவர், இந்திரா காந்தியின் வருகை பற்றி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :--

"இரு பெரும் சனநாயக நாடுகளுக்குமிடையே உறவுகள் சீராக இருக்கின்றன என்று நான் சொன்னால், ஒளிக்காமல் பேசியவன் ஆகமாட்டேன்; அதனால்தான், திருமதி இந்திரா காந்தியும்--அதிபர் நிக்சனும சந்தித்துப் பேசப்போவதை நான் உளமார வரவேற்கிறேன்.

நமக்குள் உடன்பாடும் -- மாறுபாடும் உள்ளவை பற்றி நம் இரு தலைவர்களும் ஒளிவு மறைவின்றி உண்மையாகப் பேசி அறிந்து கொள்வதைவிட, நிலைமையை அமைதிப்படுத்த உதவும் வழி வேறு ஏதும் எனக்குத் தெரியவில்லை.

இன்றைய நிலைமையில் நமக்குள் உள்ள வேறுபாடுகள் -- பல்வேறு தப்பெண்ணங்களால் பெரிதுபடுத்தித் திரித்துக் கூறப்பட்டுள்ளன என்பதே என் திண்ணமான கருத்து; நடக்கவிருக்கும் பேச்சுக்களால் இந்தக் குழப்பங்கள் பெரிதும் நீங்கிவிடும் என்பது உறுதி.

நான் இந்த நேரத்தில் நமக்குள் உள்ள வேறுபாடுகளைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டிராமல, அவற்றைவிடப் பெரிதாக நம் இரு நாட்டு மக்களுக்கும் – அரசுகளுக்குமிடையே இருக்கின்ற பொதுவான நலன்களையும் பிணைப்புகளையும் பற்றி ஆராய விரும்புகிறேன்.

இந்தியாவின் விடுதலை இயக்கத்தை ஆதரித்த முதல் பெரிய வல்லரசு அமெரிக்காவாகும்; 1947-க்கு நெடுநாளைக்கு முன்னாலிருந்தே அதனை அமெரிக்கா ஆதரித்தது; காலனி ஆதிக்கத்தை எதிர்ப்பது ஒரு பெருமையாக இல்லாத காலம் அது -- கிழக்கிலும் மேற்கிலும் மற்ற வல்லரசுகள் அந்த எதிர்ப்பைப் பாராட்டாத காலமுமாகும்; அந்தக் காலத்திலேயே அமெரிக்கா, அரசு முறையிலும் தனிப்பட்ட முறையிலும் ஆதரவளித்தது

இந்தியா விடுதலை அடைந்த பின்னர், அதற்குப் பொருளாதார உதவி வழங்கிய முதல் நாடுகளிலே அமெரிக்கா ஒன்றாகும்! நாம் முதல் ஒப்பந்தம் கையெழுத்திட்டது முதல் இந்த இருபது ஆண்டுக் காலத்தில், இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கியிருக்கும் உதவி உலகத்திலுள்ள மற்ற எல்லா நாடுகளும் சேர்ந்து வழங்கியுள்ள உதவிகள் அனைத்தையும்விட அதிகமாகும்; அது மட்டுமல்ல -- உலகத்தில் வேறு எந்த நாட்டுக்கும் கொடுத்திராத அளவு இந்தியாவுக்கு அமெரிக்கா உதவி அளித்துள்ளது.

இந்த உதவியையும் இந்திய மக்களின் தேவைகளை ஒட்டியே வழங்கியுள்ளோமே தவிர, பயன் உண்டோ இல்லையோ -- பெருமையாகக் காட்சிப் பொருட்களை கட்டிப் போடவேண்டும் என்பதற்காக அல்ல; எடுத்துக்காட்டாக, கடந்த சில ஆண்டுகளில் எங்கள் உதவி முக்கியமாக இந்தியாவின் தொழில்கள் முழு அளவில் இயங்கிவருவதற்கு வேண்டிய மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான நிதி உதவியாக இருந்துவந்துள்ளது.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவைச் சீனா தாக்கிய போது, அவசரமாகத் தேவையாயிருந்த இராணுவத் தளவாடங்களுடன் உடனே இந்தியாவின் துணைக்கு வந்தது -- பிரிட்டனோடு அமெரிக்காவாகும்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பாழ்படுத்தும் வறட்சி ஏற்பட்டபோது, அமெரிக்கா தனது வசதிகளை ஒன்று திரட்டிக் கிட்டத்தட்ட ஒரு கோடி டன் கோதுமையை அனுப்பிவைத்து அங்கு பெருந்துன்பம் வராமல் தடுக்க உதவியது.

பல ஆண்டுகளாக இந்தியாவுக்கும்—அமெரிக்காவுக்குமிடையே ஒரு பெரும் வாணிப உறவு வளர்ந்து வந்துள்ளது. இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருட்களை ஏராளமாக வாங்கும் நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகும்; இந்தப் பொருள்களுக்குரிய விலையை நாங்கள் டாலராகக் கொடுக்கிறோம். அந்தடாலரைக் கொண்டு இந்தியா எந்த நாட்டிலும் தனக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொள்ளலாம்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் 12,000 இந்திய மாணவர்களுக்குமேல் படிக்கிறார்கள்; வேறு எந்த அயல்நாட்டிலும் இத்தனை பேர் இல்லை; அமெரிக்காவுக்கு இதைவிட அதிகமான மாணவர்களை அனுப்பும் நாடு எங்கள் அண்டை நாடான கனடா ஒன்றேயாகும்.

பண்பாட்டுத் துறையில் பார்த்தால், அமெரிக்கருக்கு இந்தியாவில் ஆழ்ந்த ஆர்வம் உண்டு; இந்தியாவின் வரலாறு—சமய தத்துவம்--மொழிகள் ஆகியவற்றில் நல்லதோர் ஆர்வம் விரைந்து வளர்ந்து பரவி வருகிறது. சில நாட்களுக்கு முன்புகூட, 300 அமெரிக்க மேற்படிப்பு நிலையங்களின் சார்பில் அமெரிக்கப் பல்கலைக் கழகத் தலைவர்கள் பலர் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து, தங்கள் பாடத் திட்டங்களில் இந்தியப் படிப்புகளை எவ்வாறு இணைக்கலாம் என்று புது வழிவகைகளை ஆராய்ந்து சென்றனர்.

மகாத்மா காந்திக்கு அமெரிக்கா பெரிதும் கடமைப்பட்டுள்ளது; அவர் போதித்த அகிம்சை அறவழிப் போராட்ட முறை எங்கள் நாட்டில் குடியுரிமை இயக்கத்துக்கு உள்ளுணர்வு ஊட்டியுள்ளது.

போர்க் கைதிகளை எப்படி நடத்த வேண்டுமென்ற 1949-ம் ஆண்டு ஜெனீவா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் அதன்படி நடக்க வேண்டும் என்று சென்ற ஆண்டு ஐ. நா.-வில் அமெரிக்கா கொணர்ந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட நாடுகளில் ஒன்று, வடக்கு வியட்நாம்; அது, தான் பிடித்து வைத்திருக்கும் கைதிகளை நடத்தும் விதம் குறித்து அமெரிக்கா மிகவும் கவலை கொண்டுள்ளது. இந்த விவகாரத்தில் இந்தியாவின் ஆதரவை நாங்கள் பெரிதும் பாராட்டினோம்.

அரசியல் வகையிலே, நம் இரு நாடுகளையும் உலகத்தின் மிகப் பெரிய சனநாயக நாடுகள்என்று சொல்வது ஒரு பல்லவியாகி விட்டது; ஆனால் அது உண்மை; நம் இரு நாட்டு மக்களுக்குமே பெருமை தரும் உண்மை அது.

இருந்தாலும், பெரிய விவகாரங்களில் நமக்குள் வேறுபாடுகள் உள்ளன. இந்தியாவின் குறிக்கோள்கள் ஈடேறும்படி நாங்கள் ஆதரவளிப்பதற்கு இந்த வேறுபாடுகள் எங்களுக்குத் தடையாயில்லை.

சில சமயங்களில் நாம் விவகாரங்களை வெவ்வேறு வகையில் நோக்குகிறோம்; இன்று துணைக் கண்டத்தில் ஏற்பட்டுள்ள வேதனைமிக்க பிரச்சினையிலும் இப்படியே; நடப்புகளை மதிப்பிடுவதிலும் கடைப்பிடிக்கும் வழிமுறைகளிலும் உண்டாகும் நேர்மையான மாறுபாடே அன்றி, குறிக்கோள்களில் மாறுபாடு இல்லை. இன்றைய சிக்கல்கள் எளிதாகத் தீர்த்துவைக்கக் கூடியவையாய் இல்லை; ஆயின், நாம் ஒருவர் மற்றொருவருடைய நிலைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்வது அவசியம்."

பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் எல்லா உதவிகளையும் நிறுத்திவிட முடிவு

வாஷிங்டன், அக். 16—

அமெரிக்க செனட் சபை (மேல் சபை)யின் வெளிவிவகாரக் குழு, 'பாகிஸ்தானுக்கு அளித்துவரும் உதவிகளை அடியோடு நிறுத்திவிட வேண்டும்' என்று முடிவு செய்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் சமாதானத்தை ஏற்படுத்தப் பாகிஸ்தான் ஒத்துழைப்பதாகவும், தற்போது இந்தியாவிலுள்ள அகதிகள் கிழக்கு வங்கத்திலுள்ள தங்கள் இல்லங்களுக்கு அச்சம் ஏதுமின்றித் திரும்ப அனுமதிப்பதாகவும் அமெரிக்க அதிபர் சான்று கூறும் வரையில் பாகிஸ்தானுக்கு எல்லாவித உதவிகளையும்— இராணுவ, பொருளாதார, மானிய, கடன், விற்பனை ஆகிய உதவிகளையும்— நிறுத்திவிட இந்த முடிவு, வகை செய்கிறது

தற்போது அனுப்பப்படும் நிலையில் உள்ள உதவிகளுக்கும் -- இனி அனுப்பப்படவிருக்கும் உதவிகளுக்கும் இது பொருந்தும்.

உத்தரப் பிரதேசத்தில் அணுமின்சாரத் தொழிற்சாலை

புதுடில்லி, அக். 15—

வடக்குப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் அணுமின்சாரத் தொழிற்சாலை, உத்தரப் பிரதேசத்தில் அமைக்கப் படும்.

மத்திய துணை அமைச்சர் குரேஷி இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழகத்தின் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில்

டில்லியில் முதல்வர் நடத்திய பேச்சுவார்த்தையின் பலன்

செய்தியாளர்களிடம் கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 16—

புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுச் சென்னைக்குத் திரும்பிய முதலமைச்சர் கருணாநிதி அவர்களைச் செய்தியாளர்கள் சந்தித்து, 'திட்டத்தின் அளவைப் பொறுத்தவரையில், மாநில அரசுக்கு மத்திய அரசு கொடுக்கும் நிதியுதவியைக் குறைக்கக் கூடாது என்று மத்திய அரசை வற்புறுத்தினீர்களா?' என வினவினர்.

உடனே முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், 'வழக்கமாக ஊதிக்கொண்டிருக்கும் சங்கை ஊதியிருக்கிறோம்; மத்திய நிதி அமைச்சர் சவான், திட்ட அமைச்சர் சி. சுப்பிரமணியம் ஆகியோர், நாம் நிதி ஆதாரங்களை அதிகப்படுத்தியிருப்பதற்குப் பாராட்டுத் தெரிவித்ததுடன், திட்ட அளவைக் குறைக்காமல் நிறைவேற்ற நாம் மேற்கொண்டுள்ள ஆர்வத்தை வரவேற்றார்கள்."

செய்தியாளர் :—"ஏறிவரும் விலைவாசி, பணவீக்கம் காரணமாகத் திட்டத்திற்குத் தரப்பட்டுள்ள நிதியைக் கொண்டு குறைந்த அளவு திட்டங்களைத்தானே நிறைவேற்ற முடியும்?"

முதல்வர் :—"புதிதாக நாம் எந்தத் திட்டத்தையும் எடுக்கவில்லை; ஏற்கனவே முடிவு செய்த திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதால் இந்தக் கேள்விக்கே இடமில்லை."

இந்தியாவின் பாதுகாப்பு — தமிழகத்தின் உறுதிமொழி

முதலமைச்சரிடம் செய்தியாளர்கள் மேலும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் கேட்ட கேள்விகளும் — முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

"டில்லியில் தலைமையமைச்சரைச் சந்தித்துப் பேசிய நாங்கள், தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகள்—இந்தியப் பாதுகாப்பு—ஆகியவைபற்றி விரிவாகப் பேசினோம்; 'இந்தியப் பாதுகாப்புக்கும்—வங்க தேசப் பிரச்சினையினால் ஏற்படும் விளைவுகளுக்கும் தமிழக மக்கள் மத்திய அரசுக்கு எல்லா ஒத்துழைப்பும் தருவார்கள்' என்ற உறுதியை தலைமையமைச்சருக்கு அளித்தேன்; வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில் இந்திய மக்களும் — தமிழக மக்களும் இந்தியப் பாதுகாப்புக்காக மேலும் சில தியாகங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்று கருதுகிறேன்."

செய்தியாளர்:—"அப்படியானால் சூழ்நிலை பயம் தரத்தக்கதாக இருக்கிறதா?"

முதல்வர்:—"நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை."

புதிய தொழிற்சாலைகள்

முதலமைச்சர் மேலும் வெளியிட்ட தகவல் வருமாறு:—

"மத்தியத் தொழிலமைச்சரை நானும் — அமைச்சர் மாதவனும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினோம்; தமிழ்நாட்டில் கால்ஷியம் — கார்லைபடு — போரக்ஸ்—மென் இரும்பு ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி தர ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; இதற்கான அனுமதிக் கடிதங்கள் இன்னும் சில நாட்களில் கிடைத்துவிடும்.

பெட்ரோலியம் தொழிலை அடிப்படையாகக் கொண்டு நைலான் தயாரிக்கும் தொழிற்சாலைக்கும் அனுமதி கிடைத்திருக்கிறது.

நிலையம் பற்றி உறுதி

மத்திய விவசாய அமைச்சர் பக்ருதீன் அலியைச் சந்தித்து, மண்டபம் மீன் ஆராய்ச்சி நிலையத்தை மாற்றுவது குறித்து ஏற்கனவே மத்திய அரசு அளித்துள்ள வாக்குறுதிக்கு மாறாக அங்குள்ள அலுவலர்கள் மாற்றப்படுகிறார்கள் என்பதைத் தமிழக அரிசன நலத்துறை அமைச்சர் நேரிலேயே சென்று சொல்லி வந்திருக்கிறார் என்பதையும் எடுத்துச் சொன்னோம்; 'அங்குள்ள அலுவலர்கள் மாற்றப்படாமல் இருக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அவர் உறுதி கூறினார்.

உடனடியாக தருமாறு வற்புறுத்தல்

தொழில் வளர்ச்சித் துறை அமைச்சரைச் சந்தித்து, கோவையில் மூடப்பட்டிருந்த 5 ஆலைகளை ஏற்று நடத்துவதில் தமிழக அரசுக்கு தேசியப் பஞ்சாலைக் கார்ப்பரேஷன் கொடுக்க வேண்டிய ரூ 24 இலட்சம் இன்னும் தரப்படாமல் இருப்பதைக் குறிப்பிட்டு அதை உடனடியாகத் தருமாறு வற்புறுத்தினோம்; அந்தத் தொகையை இரண்டொரு நாட்களில் தர ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் 6 ஆலைகளை ஏற்று நடத்தத்தக்க ஆலோசனைகளைக் கூற ஒரு குழு அமைக்கும்படி மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம்; அதற்கு அமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இராஜராஜ சோழன் சிலை பற்றிய பிரச்சினை

இராஜராஜ சோழன் சிலையைத் தஞ்சை பெரிய கோவிலில் வைப்பது குறித்தும் தலைமையமைச்சரிடம் பேசினேன்; இது குறித்து சாதகமான பதில் விரைவில் கிடைக்குமென நம்புகிறேன்.

அதிகப்பற்று பிரச்னை — பரிசீலிப்பதாக உறுதி

ரிசர்வ் பாங்கிக்குத் தரவேண்டிய அதிகப் பற்றுத் தொகையை மாற்றி அரசு கடனாக மாற்றிக் கொள்ள வேண்டுமெனக் கோரினோம்; 'இதுபற்றி யோசித்து பிறகுதான் முடிவு எடுக்கப்படும்' என்று கூறினார்கள்.

இவ்வாறு அதிகப் பற்றுத் தொகையை கடனாக மாற்றுவது என்பது எப்போதுமே இருக்கவேண்டும் என்று நான் கூறவில்லை; மாநிலங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள ரிசர்வ் பாங்கியின் அதிகப் பற்று பெற்றுத்தான் ஆகவேண்டும்."



விற்பனை விளம்பரம்

'TRAP VACUUM CABINET'

(ENGLISH MAKE)

WITH ACCESSORIES IN GOOD CONDITION

மற்ற விபரங்கட்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும் :—

துணை இயக்குநர் (பட்டுப் புழு வளர்ப்பு),
தொழில் வணிக இலாகா,
50, கார்ன்வால் சாலை,
கூனூர்-1, நீலகிரி.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

17—10—71

சென்னை முதல் வட்டம்

எம். ஜி. ஆர். நற்பணி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு சூரிய நாராயண செட்டித் தெருவில்; தலைவர்: சே. அரசு; பேசுவோர்: புரட்சி நடிகர் எம் ஜி. ஆர்., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., ஆலடி அருணா எம்.எல்.ஏ., வலம்புரி ஜான், ஜீவா கலைமணி, இரகுமான் கான், கே. துரைராசு எம்.சி., இரா. மு. மனோகரன் எம்.சி., பி. ஏ. என். இராசரத்தினம், கே. இராசு, பூ. நாகலிங்கம், கு. இராமலிங்கம்.

மா. பொ. வேதாசலம்

சென்னை, அக். 16—

செங்கற்பட்டு மாவட்டம் சைதை வட்ட தி. மு. கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளர் தோழர் மா. பொ. வேதாசலம், மாதவரம் நகரியத்துக்குத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1971-முதல் 1974-ம் ஆண்டுவரை அவர் இப்பதவியை வகிப்பார்.

மாதவரம் நகரியமாக ஆக்கப்படுவதற்கு முன்னர், அங்கு இயங்கிவந்த பேருராட்சிமன்றத்திலும் இவர் உறுப்பினராக இருந்துவந்தார்.

நீண்டகால இயக்கத் தோழரான தோழர் வேதாசலம், கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் ஈடுபட்டுச் சிறை சென்றிருக்கிறார்.

மாதவரம் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டிருக்கிறார்.

டில்லிவாழ் தமிழ்நாட்டுத் தாழ்த்தப்பட்ட மக்கள்

25,000 பேர்களுக்குச் சலுகை மறுக்கப்படுகிறதாம்

முதலமைச்சர் கருணாநிதியிடம் முறையீடு — ஆவன செய்வதாக உறுதி

புதுடில்லி, அக். 16—

"தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களான பள்ளர் — பறையர்— சக்கிலியர் எனப்படும் பிரிவினர், தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ளனர்; ஆனால் டில்லி மாநகரில் இந்தப் பிரிவினர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை; இதுவரை இந்தப் பிரிவினர், 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்று அங்கீகரிக்கப்படவில்லை; இதன் காரணமாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய இலவசப் படிப்பு—வீட்டு மனை ஆகியவை கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது"

என்று புதுடில்லியில் உள்ள தமிழ்நாட்டு அரிசன மக்களின் பிரதிநிதிகளில் ஒருவரான எம். இராசு என்பவர், தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்களிடம் தெரிவித்தார்.

புதுடில்லியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த அரிசனக் குடும்பங்கள் 25,000 உள்ளன.

டில்லிப் பெருநகர் நிர்வாக மன்றத்தின் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இந்த 25,000 தமிழ் அரிசனக் குடும்பங்களையும் சேர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு உதவி புரியவேண்டும் என்று அவர்கள், தமிழ்நாடு அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

இந்தத் தமிழ் அரிசன மக்களின் பிரதிநிதிகள், புதுடில்லியில் தமிழக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, டில்லி மாநகர் நிர்வாகத்தினரிடம் தங்கள் கோரிக்கையைத் தெரிவிக்குமபடி கூறினர்.

"டில்லியில் உள்ள சென்னை (தமிழ்நாடு) கல்விச் சங்கம், இங்குள்ள தமிழ் அரிசன மக்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி — பகல் உணவு ஆகியவற்றைத் தனது பள்ளிகள்மூலம் வழங்க வேண்டும்; அவ்வாறு அவர்கள் செய்யும்படி முதலமைச்சர் அவர்கள் அந்த சங்கத்தாரிடம் தெரிவிக்கவேண்டும்" என்று கலைஞர் அவர்களிடம் அரிசன மக்களின் பிரதிநிதிகள் கூறினர்.

தம்மால் இயன்றதனைத்தையும் செய்வதாக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், இந்த அரிசன மக்கள் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

காட்டூர் கோத்தாரி சர்க்கரை ஆலை

தொழிலாளர்களுக்குப் பண்டிகை முன்பணம்

காட்டூர் கோத்தாரி சர்க்கரை ஆலையில் முன்னேற்றச் சங்கமும் — ஐ. என். டி. யூ. சி-யும் இணைந்து சுமார் ரூ. 70,000 வரை தொழிலாளர்களுக்குச் சிறப்புப் பண்டிகை முன்பணம் வாங்கித் தந்திருக்கிறது.

பேச்சுவார்த்தையில் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் எஸ்.ஜி கிருஷ்ணன் — என். நல்லுசாமி — துரை. கலியபெருமாளும், ஐ.என்.டி.யூ.சி. சார்பில் பழனியாண்டி — மைனுதீனும் கலந்துகொண்டனர்.

மேலத் தஞ்சை தி.மா.மு.க. அமைப்பு

மேலத் தஞ்சை திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம், 24-10-71 மாலை 4-மணிக்கு தஞ்சை இராமநாதன் செட்டியார் கலையரங்கில் நடைபெறும்; அதுபோது மாணவத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு மாநில அமைப்பாளர் எல். கணேசன் எம்.எல்.ஏ. கேட்டுக்கொள்கிறார்.

போனசு சட்டம் பற்றி இந்திரா காந்தி

அனைத்துக் கட்சியினரையும் கலந்தாலோசிப்பார்

பம்பாய், அக். 15—

"போனசுப் பிரச்சினை பற்றி விவாதித்து முடிவு செய்வதற்காக எல்லாக் கட்சிகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டப்போகிறேன்; இப்பிரச்சினையில் பலரும் தொடர்பு கொண்டிருப்பதால், அவர்களுடனும் ஆலோசனை செய்யப்பட வேண்டியிருக்கிறது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்

சென்னை — எஸ்பிளனேடு ஒய். எம்.சி.ஏ. பட்டி மன்றச் சார்பில், 19—10—71 மாலை 6 மணிக்கு, 'குமரிக் கண்டம்—ஒரு புதிய நோக்கு' என்ற தலைப்பில், திரு. க.ப. அறவாணன் உரையாற்றுவார்; திரு. ஊ. செயராமன் தலைமை தாங்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.